**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 202/2024** |
| **Ranking of witness** | **:** | **PW1** |
| **Name** | **:** | **சேகர்** |
| **Father's Name** | **:** | **த/பெ வேடிச்சிகவுண்டர்** |
| **Age** | **:** | **55** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03-06-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது வீராணம் கிராமம், சேலம் மாவட்டத்தில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 29-07-2024ஆம் தேதியன்று, இரவு 02.45 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது, எனக்கு என்னுடைய பங்காளி உறவுமுறையான மணி என்பவர் போன்மூலம் என்னை தொடர்பு கொண்டு, எனது மகன் கோவிந்தராஜ் சென்ற பிக்அப் பொலிரோ பூ லோடு வாகனத்தில் உட்கார்ந்து, கிளீனராக செல்லும்போது, அந்த வாகனத்தின் ஓட்டுநர் சரவணன் சாலையின் ஓரமாக நின்றுகொண்டிருந்த முட்டை வண்டியின்மீது மோதிவிட்டதாக சொன்னார். விபத்தினால் எனது மகனுக்கு தலையிலும், வயிற்றிலும் அடிபட்டு, மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னார்கள். விடியற்காலை 04.00 மணிக்கு, நான் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, எனது மகனுக்கு ஏற்பட்ட காயங்களினால் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கூறினார்கள். அதன் பின்பு தருமபுரி காவல் நிலையம் சென்று, சம்பவம்பற்றி புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகாரானது **அ.சா.ஆ.1**ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு மதியத்திற்கு மேல் எனது மகன் பிரேதத்தை சடலக் கூராய்வு செய்து பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

விபத்து நடைபெற்றபோது நான் வீட்டில் இருந்தேன். எனவே, விபத்தானது எவ்வாறு நடைபெற்றது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது.

**மறுவிசாரணை** : இல்லை

| |
|---|
| **திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.** |

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.06.03 14:26:21 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**

**சாட்சியின் கையொப்பம்.**

**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **CC. No: 202/2024** |
| **Ranking of witness** | : | **PW2** |
| **Name** | : | **அஜீத்** |
| **Father's Name** | : | **த/பெ மாரிமுத்து** |
| **Age** | : | **28** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Religion** | : | |
| **Calling** | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03-06-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

## முதல் விசாரணை :

நான் தற்போது சில்லாரஅள்ளி கிராமத்தில் கே.எஸ். காபி பாரில் கேசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30-07-2024ஆம் தேதியன்று, இரவு 01.00 அல்லது 01.30 மணிக்கு நான் எனது கடையில் வேலை செய்யும்போது, அப்போது ஈச்சர் வாகனத்தின் ஓட்டுநர் வாகனத்தை நிறுத்திவிட்டு, எனது கடையில் டீ சாப்பிட்டார். அப்போது பூ வண்டி பெரிய பிக்அப் வாகனமானது, வேகமாக வந்து, ஓரமாக நின்று கொண்டிருந்த ஈச்சர் முட்டை வண்டி மீது மோதிவிட்டது. இதனால், அந்த வண்டியின் ஓரத்தில் உட்கார்ந்திருந்த நபருக்கு உடம்பு முழுதும் அடிப்பட்டு மயக்க நிலையில் இருந்தார். பின்பு பிரைவேட் ஆம்புலன்சுக்கு போன் செய்து, சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். பின்பு 108 ஆம்புலன்ஸ் வந்தது. பிக்அப் ஓட்டுநரை அதில் அனுப்பி வைத்தேன். பிக்அப் வாகனத்தின் ஓட்டுநர் ஆஜர் எதிரிதான். விபத்தில் தொடர்புடைய வாகனங்களை தீயணைப்பு துறையினர் பறிமுதல் செய்து கொண்டு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

ஈச்சர் நிறுத்தியதாக கூறப்படும் இடமானது, வாகனத்தை நிறுத்துவதற்கு தனியாக ஒதுக்கப்பட்ட இடம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். மேற்படி ஈச்சர் முட்டை வாகனத்தின் பதிவு எண் மற்றும் அதன் ஓட்டுநர் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் பிக்அப் வாகன ஓட்டுநரை ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பியதாக கூறிய நிலையில், அந்த ஈச்சர் வாகனம் எங்கிருந்து வருகிறது என்பதை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அதேபோல் மேற்படி பிக்அப் வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் பிக்அப் வாகனத்தின் பதிவு எண்ணும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் போட்டோ எடுத்ததாக நான் கூறிய நிலையில் எப்போது, எந்த தேதியில் போட்டோ எடுத்தார்கள் என்று எனக்கு நினைவில்லை. 108 ஆம்புலன்சில் பிக்அப் வாகன ஓட்டுநரை சிகிச்சைக்காக நான் அனுப்பியதாக நான் கூறியது தவறு என்றும், அவருக்கு விபத்தினால் அடிபடவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் உண்மையிலேயே இருந்திருந்தால் யாருக்கு அடிப்பட்டது என்று எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதிற்கிணங்க அவர்களுக்கு ஆதராவக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணிபுரிந்த கடையில் சிசிடிவி கேமரா அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால், சம்பவ இடத்தில் சிசிடிவி கேமரா இல்லை.

விபத்திற்கு முழுக்க முழுக்க காரணமே ஈச்சர் வாகனத்தின் ஓட்டுநர்தான் காரணம் என்றும், அவர் வாகனத்தை முறையாக அனுமதிக்கப்பட்ட இடத்தில் நிறுத்தாததே காரணம் என்றும், விபத்திற்கு முழு காரணமும் ஈச்சர் வாகன ஓட்டுநர்தான் காரணம் என்றால் சரியல்ல. ஈச்சர் வாகனம் ஓரமாகத்தான் நின்றுகொண்டிருந்தது.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.06.03 14:26:34 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**

**சாட்சியின் கையொப்பம்.** **தருமபுரி.**